பக்கங்கள் 18+ 02

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 31 வெள்ளிக்கிழமை 17.10.2025 | அதிர்வு 78

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு

## கிழக்கு தமிழ்ப் பாடசாலைகளுக்கு ஒக். 21ஆம் திகதி விசேட விடுமுறை




கிழக்கு மாகாண தமிழ்ப் பாடசாலைகளுக்கு எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# ஹரிணி - மோடி டில்லியில் சந்திப்பு

## இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் இரு தலைவர்களும் விரிவான கலந்துரையாடல்

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இன்று வெள்ளிக்கிழமை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தார்.

இதன்போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் இரு தலைவர்களும் விரிவான கலந்துரையாடல்களை நடத்தினர். 04





# பாரா ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தை வென்ற ஊனமுற்ற படை அதிகாரி ரயில் மோதி பலி!

இலங்கை இராணுவ அதிகாரியும் பாரா ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற வருமான வர்ணகுலசூரிய அமில பிரஷான், மதுரங்குளிய பகுதியில் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளார்.

மதுரங்குளி, கீர்த்திசிங்கேகமவைச் சேர்ந்த 34 வயதான இரண்டு குழந்தைகளின் தந்தையான இவர், 2018 ஆம் ஆண்டு இந்தோனேசியாவில் நடந்த பாரா ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கை இராணுவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் போட்டிகளில் தங்கப் பதக்கங்களை வென்றிருந்தார். அவர் பூசா முகாமில் பணியாற்றும் ஓர் ஊனமுற்ற அதிகாரி ஆவார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு கொழும்பில் இருந்து புத்தளம் நோக்கிச் சென்ற பங்கதெனியா ரயிலில் அந்த அதிகாரி மோதியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதி குடியிருப்பாளர்களின் அழைப்பைத் தொடர்ந்து நேற்று மதியம் மதுரங்குளிய நகரத்துக்கு அருகிலுள்ள ரயில் பாதையில் அவரது உடல் கண்டெடுக்கப்பட்டதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---



### டிஜிட்டல் அடையாள அட்டை திட்டம் தொடர்பில்

# இந்தியாவுடன் இலங்கை செய்த உடன்பாட்டை நிராகரிக்கக் கோரும் விமலின் மனு நிராகரிப்பு

டிஜிட்டல் அடையாள அட்டை திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இந்தியாவுடன் இலங்கை செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செல்லுபடியற்றதாக அறிவிக்கக் கோரி, முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச மற்றும் அமானி ரிஷாத் ஹமீத் ஆகியோர் தாக்கல் செய்த இரண்டு அடிப்படை உரிமைகள் மனுக்களை உயர்நீதிமன்றம் இன்று தள்ளுபடி செய்தது.

இந்த மனுக்கள் பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன தலைமையிலான மூன்று பேர் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

மனுக்களை மேலும் தொடர முடியாது என்று கூறி, சட்டமா அதிபர் எழுப்பிய ஆரம்ப ஆட்சேபனைகளை அமர்வு ஏற்றுக்கொண்டது.

இதன் விளைவாக, இலங்கை குடிமக்களுக்கான டிஜிட்டல் அடையாள அட்டை திட்டம் தொடர்பாக இலங்கை அரசுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிரான மனுக்களை விசாரிக்கத் தேவையில்லை என உயர்நீதிமன்றம் முடிவு செய்து, அவற்றைத் தள்ளுபடி செய்ததாக அறிவித்தது.

# ஒக்டோபர் 21ஆம் திகதி மத்திய மாகாண தமிழ்ப் பாடசாலைகளுக்கும் விடுமுறை!

(பி.கேதீஸ்)

மத்திய மாகாணத்தில் உள்ள அனைத்து தமிழ்ப் பாடசாலைகளுக்கும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு பண்டிகைக்கு மறுநாள் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாகாண ஆளுநரால் விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.




நுவரெலியா கல்வி வலயத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.கணேஸ்ராஜ், பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்பிடம் முன்வைத்த வேண்டுகோளுக்கிணங்க அவர் மத்திய மாகாண ஆளுநரிடம் விடுத்த கோரிக்கைக்கிணங்க இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடுமுறைக்குப் பதிலாக எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை பாடசாலைகளை நடத்துமாறு சகல அதிபர்களுக்கும் மத்திய மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை, கிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு பண்டிகைக்கு மறுநாள் 21 ஆம் திகதி விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழைச் சேர்ந்த இளம் குடும்பப் பெண் உட்பட இரண்டு பெண்கள் கோர விபத்தில் உயிரிழப்பு

அநுராதபுரம் – பாதெனிய வீதியில் ஏரியாகல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் குடும்பப் பெண் உட்பட இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளதுடன் நால்வர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது என்று தம்புத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.




கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்ற வான் ஒன்று வீதியை விட்டு விலகி மரம் மற்றும் தொலைபேசிக் கம்பத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது வானில் சாரதியும் அதில் பயணித்த இரண்டு பெண்கள் மற்றும் மூன்று ஆண்களும் காயமடைந்து தம்புத்தேகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இரண்டு பெண்களும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதியைச் சேர்ந்தவர்களான அகிலன் திவ்யா (வயது 31) என்ற இளம் குடும்பப் பெண்ணும், 85 வயதுடைய வயோதிபப் பெண்ணுமே உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்புத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## காட்டு யானை தாக்கி வயோதிபப் பெண் பலி!

காட்டு யானை தாக்கி வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை அநுராதபுரம், கஹட்டகஸ்திகிலிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரத்மல்கஹவெல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் ரத்மல்கஹவெல பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயதுடைய பெண் ஆவார்.

இவர் தனது வீட்டுக்கு முன்பாக நின்றுகொண்டிருந்த போது காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார் என்று கஹட்டகஸ்திகிலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தலைமறைவாக இருந்த "தொட்டலங்க கன்னா" பொலிஸாரால் கைது!

பொலிஸாரிடமிருந்து தலைமறைவாக இருந்த, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட போதைப்பொருள் கடத்தல்காரரான "தொட்டலங்க கன்னா" என்பவர் கொழும்பு வடக்கு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய "தொட்டலங்க கன்னா" என்பவர் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி 39.99 கிராம் ஹெரோயினுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் நீதிமன்ற உத்தரவின் கீழ் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

பிணையில் விடுதலை செய்யப்பட்ட பின்னர் "தொட்டலங்க கன்னா" என்பவர் பிரதேசத்தைவிட்டு தப்பிச் சென்று தலைமறைவாக இருந்த நிலையில் அவருக்கு எதிராக ஆயுள் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டிருந்தது.



அத்துடன் தலைமறைவாக உள்ள "தொட்டலங்க கன்னா" என்பவரைத் தேடிக் கண்டுபிடித்து கைது செய்து தண்டனைக்கு உட்படுத்துமாறும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்துப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது "தொட்டலங்க கன்னா" என்பவர் கொழும்பு – கொட்டாஞ்சேனையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

## கிழக்கு தமிழ்ப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை தீபாவளிப் பண்டிகை என்பதால் மறுநாள் செவ்வாய்க்கிழமை விசேட விடுமுறை மாகாணக் கல்வி அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி பதில் பாடசாலை எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



## ஹரிணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுடில்லியில் நடைபெற்ற இந்தச் சந்திப்பு தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் தளத்தில்,

“இலங்கைப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். கல்வி, பெண்களுக்கு அதிகாரமளித்தல், புதுமை, அபிவிருத்தி ஒத்துழைப்பு மற்றும் நமது மீனவர்களின் நலன் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் நாங்கள் கலந்துரையாடினோம். நெருங்கிய அண்டை நாடுகளாக, நமது இரு நாட்டு மக்களின் செழிப்புக்கும், பகிரப்பட்ட பிராந்தியத்திற்கும் நமது ஒத்துழைப்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது.” – என்று பதிவிட்டுள்ளார்.

“இந்தச் சந்திப்பின் போது இரு தரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், கல்விச் சீர்திருத்தங்கள், டிஜிட்டல் முயற்சிகள் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பில் இரு நாடுகளும் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பான விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.” – என்று இலங்கைப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.







# வைர விழா நிகழ்வுகள் கலைத்தூது கலையகத்தில்

காலநிலை சீரின்மையால் நாளையும் நாளைமறுதினமும் (18 சனி,19 ஞாயிறு) இரு நாள்களும் இல 238, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்ற அரங்கில் நடைபெறவிருந்த திருமறைக் கலாமன்றத்தின் வைர விழா நிகழ்வுகள் அனைத்தும் இல,286 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறும் என திருமறைக் கலாமன்றம் அறிவித்துள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சிறார்களைக் கையாளுதல்

இலங்கையில் சிறுவர் உரிமை மீறல்கள், குறிப்பாக அவர்களுக்கு உடல் ரீதியான தண்டனை வழங்குவது தொடர்பான சம்பவங்கள பற்றிய முறைப்பாடுகள், அறிக்கைகள் அதிகரித்து வருகின்றமை குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இத்தகைய செயற்பாடுகள் நீடித்த - உணர்வு ரீதியான - பாதிப்பை ஏற்படுத்துகின்றன எனவும், சில சந்தர்ப்பங்களில், கடுமையான மன அதிர்ச்சி மற்றும் தற்கொலைக்கு வழிவகுக்கின்றன எனவும் மனித உரிமைகள் ஆணையம் எச்சரித்துள்ளது.

இலங்கையின் சட்டக் கட்டமைப்பு ஏற்கனவே குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் கட்டளைச் சட்டம், தண்டனைச் சட்டம் மற்றும் அரசமைப்பின் 11 ஆவது பிரிவு மூலம் குழந்தைகளுக்கு வலுவான பாதுகாப்புகளை வழங்குகிறது, இது சித்திரவதை அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான சிகிச்சையிலிருந்து விடுதலையை உறுதி செய்கிறது. ஆயினும் வீடுகள், பாடசாலைகள், மாற்று பராமரிப்பு வசதிகள் அல்லது நீதி நிறுவனங்களில் உடல் ரீதியான தண்டனை இந்த பாதுகாப்புகளை மீறுகிறது என்று ஆணையம் தெரிவித்துள்ளது.

சீர்திருத்த முயற்சிகள் அவசியம். ஆனால் அந்த முயற்சிகள் அனைத்து அமைப்புகளிலும் உடல் ரீதியான தண்டனையை ஒழிப்பதற்கான பரந்த கூட்டு உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாகக் இருக்க வேண்டும் என்றும் ஆணையம் வலியுறுத்திம்உளமை கவனிக்கத் தக்கது.

'ஒழுக்கம் முக்கியமானது' என்று - கோட்பாட்டை - உண்மையை - மனித உரிமைகள் ஆணையம் ஏற்றுக் கொள்கின்றது. ஆனால் அது பயம் அல்லது வன்முறையை அடிப்படையாகக் கொண்டு அல்ல, குழந்தைகளின் கண்ணியத்தையும் நம்பிக்கையையும் வளர்க்கும் நேர்மறையான மற்றும் மரியாதைக்குரிய அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்ட செயன்முறையில் அது முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அது கூறுகின்றது.

ஆனால் வீடுகள், பாடசாலைகள், மாற்று பராமரிப்பு வசதிகள் அல்லது நீதி நிறுவனங்களின் கீழ் சிறுவர்களை பராமரிக்கும் அமைப்புகளில் இதுதான் பிரச்சினைக்குரிய விடயமாக இருக்கின்றது.

ஒழுக்கத்தையும் சிறுவர்கள் மத்தியில் பேண வேண்டும், ஆனால் அதற்கு பயத்தையோ வன்முறையையோ பின்பற்றக் கூடாது. கண்ணியத்தையும் மரியாதையையும் நம்பிக்கையையும் சிறார்கள் மத்தியில் பேணும் விதத்தில் அவர்களை ஒழுக்கத்தின் பால் பின்பற்றி, செயற்பட வைக்க வேண்டும் என்பதுதான் மனித உரிமைகள் ஆணையம் சுட்டிக்காட்டும் வழிமுறை. அதுதான் நெருக்கடியான விடயமாக இருக்கின்றது.

'அடியாத மாடு படியாது' (படிந்து போகாது) என்றும் 'அடி உதவுவது போல அண்ணன் தம்பி கூட உதவ மாட்டார்கள்' என்றெல்லாம் நம் மத்தியில் பாரம்பரியமாக காலாதி காலமாக - பரவி விட்ட அணுகுமுறை, மனித உரிமைகள் ஆணையம் இப்போது கூறுகின்ற நியாயங்களுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்படுவதற்கு மறுக்கிறது. அதே சமயம் பயப்படுத்தாமல் - தண்டிக்காமல் - சிறார்களை ஒழுக்க கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதும் நவீன சமூகக் கட்டமைப்பில் நெருக்கடியானதாகத்தான் இருக்கின்றது.

எப்படியாயினும் ஒரு புறத்தில் கண்ணியமான - ஒழுக்கம் உள்ள - அடுத்த தலைமுறையை உருவாக்க வேண்டிய கடப்பாடு நமக்கு இருக்கின்றது. அதே சமயம் பராயம் வராத பிள்ளைகளைத் தண்டிப்பதும் மனித நாகரிகத்துக்கு உடன்பாடானது அல்ல. அத்தோடு, அது சிறார்களின் எதிர்கால வாழ்வில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தத் தக்கது. இவற்றைப் புரிந்து கொண்டு சமூகம் சிறார்களை நல்ல முறையில் கையாள வேண்டும்.

# வாகரை மதுரங்கேணி குளத்திற்குப் பக்கத்தில் வயலில் இறந்த நிலையில் யானையின் உடலம்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் வாகரை பிரதேசத்திற்குட்பட்ட மதுரங்கேணி குளத்திற்கு அருகாமையில் உள்ள வயல் காணியில் இறந்த நிலையில் யானை ஒன்றின் உடல் மீட்கப்பட்டுள்ளது.

நீண்ட நாள்களுக்கு முன்னர் இறந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படும் இந்த யானையை உடல் கூற்று பரிசோதனைக்காக மிருக வைத்தியர்கள் வந்து பார் வையிட்டு சென்றுள்ள நிலையில், யானையின் உடலை வனலாகா அதிகாரிகள் அகற்றாமல் உளனர். இதனால் அப்பகுதி விவசாயிகள் தாங்கள் பாதிக்கப்படுகின்றனர் என கவலை தெரிவிக்கின்றனர். யானையின் உடலை அப்புறப்படுத்தினால்தான் இப்போகத்திற்தான விதைப்பு நடவடிக்கையினை முன்னெடுக்கலாம் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.






# திருகோணமலை அலஸ்தோட்டம் கடற்கரையில் சட்டவிரோத கட்டுமானங்கள் அகற்றப்படுகின்றன

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை அலஸ்தோட்டம் கடற்கரையில், உல்லாசப் பயணிகளுக்கான தனியார் விடுதி உரிமையாளர்களால் அமைக்கப்பட்டிருந்த சட்டவிரோத கட்டுமானங்கள் மாவட்ட கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் சட்டரீதியான அறிவித்தலை அடுத்து நேற்று இரவு முதல் அகற்றப்பட்டு வருகின்றன.

விடுதி உரிமையாளர்களே தமது கட்டுமானங்களை அகற்றி வருகின்றனர்.

திருக்கடலூர் கடற்கரையில் சட்டவிரோதமாக அமைக்கப் பட்டிருந்த மீன்வாடி,நேற்று நீதிமன்ற உத்தரவிற்கு அமைய இடித்து அகற்றப்பட்டது.

இதே போன்றே கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத கட்டுமானங்கள் அனைத்தும் விரைவில் இடித்து



அகற்றப்படும் என கரையோரம் பேணல் மற்றம் கரையோர மூலவளங்கள் முகாமைத்துவ திணைக்களம் அறிவித்தல் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






# 22 மாற்றுத் திறனாளிகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு மாகாணத்தில், சமூக சேவைகள் திணைக்களமும், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களமும் இணைந்து, ஜப்பானிய நிறுவனத்தின் ஜெய்க்கா திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் வேலை வாய்ப்பை உருவாக்கிய 22 மாற்றுத் திறனாளிகளுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை (16) இடம்பெற்றது. இந்த நிகழ்வு திருகோணமலை மாவட்ட அரச அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார தலைமையில் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களில் இருந்து மொத்தமாக 47 மாற்றுத் திறனாளிகள் மற்றும் தொழில் வழங்கிய தொழில் தருநர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வாக இது நடைபெற்றது.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் உரையாற்றும்போது,

இந்த நிகழ்வுக்கு வருகை தந்தது மிகுந்த மகிழ்ச்சியான விடயம். இவ்வாறு மாற்றுத் திறனாளிகளை தொழில் வாய்ப்புகளுக்கு உட்படுத்தும் போது அவர்கள் மிகுந்த சக்தி மிக்கவர்களாக மாறுவர். மட்டுமல்லாமல் அவர்கள் இன்னொருவருக்கும் உதவி செய்யக்கூடிய ஒரு தரத்தைப் பெற்றுக் கொள்கின்றனர்" என அவர் கூறினார்.

அத்துடன் இவ்வாறான திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உதவிய சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் ஜெய்க்கா நிறுவனத்தின் குழுவினருக்கும் மாவட்ட அரச அதிபர் பாராட்டுகளையும் தெரிவித்தார்.

தொடர்ந்து சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் கருத்து தெரிவிக்கும் போது,

சமூக சேவைகள் திணைக்களத்தால் மாற்றுத்திறனாளிகள் எல்லோருக்கும் சுய தொழிலை வழங்க முடியாது. இவ்வாறு சுய உதவி வழங்க முடியாத சந்தர்ப்பத்தில் ஜெய்க்கா நிறுவனத்துடன் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம். இதனூடாக நாடளாவிய ரீதியில் 719 இற்கும் அதிகமான மாற்றுத்திறனாளிகள் தொழில் வாய்ப்புகளுக்கு உட்படுத்தப்பட்டனர். இது ஒரு பெருமை மிகுந்த தருணம்.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் தான் கூடுதலான மாற்றுத்திறனாளிகள் தொழில் வாய்ப்புக்குள் உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இதற்காக மாவட்ட அரச அதிபரின் திறமையான வழிநடத்தலின் கீழ் மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் மற்றும் மனிதவள உத்தியோகத்தர்கள் சிறப்பாக செயல்பட்டமைக்கு எனது பாராட்டுகளையும் தெரிவிக்கின்றேன்.

இந்தத் திட்டத்தின் சிறப்பு அம்சம் சிகின ஸ்ரீலங்காவாகும். இந்த சிகின திட்டத்தின் ஊடாக மாற்றுத் திறனாளிகளையும் தொழில் தருநர்களையும் இணைப்பது மிகவும் சிறப்பான அம்சம். சிகின ஸ்ரீலங்கா திட்டம் திருகோணமலை மாவட்டத்தில் சிறப்பாக அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்து திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இருந்து பங்குபற்றிய மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் மேலதிகப் பணிப்பாளர் ஆகியோரும், திருகோணமலை மாவட்ட சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஜெய்க்கா நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.








# முத்து நகர் விவசாயிகளின் போராட்டம் இன்று 31 ஆவது நாளை எட்டியுள்ளது!

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை முத்துநகர் விவசாயிகள் தங்களது விவசாய நில அபகரிப்புக்கு எதிராக நடத்திவரும் போராட்டம் இன்று வெள்ளிக்கிழமையுடன் (17) 31 ஆவது நாளை எட்டியுள்ளது. இந்த விவசாயிகள் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் பிரதமர் ஹரினி அமர சூரிய வழங்கிய இரண்டாம் கட்ட வாக்குறுதிக்கு இன்னும் இரண்டு நாள்களே எஞ்சியுள்ளன என்று போராட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை துறை முக அதிகார சபையின் காணி என கூறி 352 விவசாய குடும்பங்களை வெளியேற்றி சூரிய மின் சக்தி உற்பத்திக்காக தனியார் கம்பனிகளுக்கு தாரை வார்த்துள்ளது என்று தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் இரு விவசாய நீர்ப் பாசனக் குளங்களை மூடி சூரிய மின்சக்தி உற்பத்தி திட்டத்துக்கு வழங்கியதால் ஜீவனோபாயம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கின்றனர்.

சாதகமான தீர்வைப் பெற்றுத் தராத பட்சத்தில் போராட்டம் தொடரும் எனவும் எச்சரித்துள்ளனர். குறித்த போராட்டக்காரர்களுடன் மக்கள் போராட்ட முன்னணி, அகில இலங்கை விவசாய சம்மேளனம் போன்றனவும் ஆதரவு வழங்கி வருகின்றன.











# கனதியான சமூக, விவசாய சேவைகளை செய்தவர் முன்னாள் எம்.பி. த.கனகசபை!

கனதியான சமூக, விவசாய சேவைகளைச் செய்தவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.கனகசபை.

அன்னாரின் 31 ஆம் நாள் அந்தியேட்டி கிரியைகள் நாளை மறுதினம் (19) ஞாயிற்றுக்கிழமை களுதாவளை இல்லத்தில் நடைபெறவுள்ளது. அவரது நினைவுக்கட்டுரை இது.



மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் களுதாவளையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற மட்டக்களப்பு மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் அமரர் த. கனகசபை தனது 86 ஆவது வயதில் மறைந்து ஒரு மாத காலமாகிறது.

நவீன விவசாய முறைகளைப் பயன்படுத்தி கிழக்கு மாகாண ஏழை விவசாயிகளின் வாழ்க்கையில் ஒளியேற்றியவர்தான் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தன்மன்பிள்ளை கனகசபை.

மட்டக்களப்பு களுதாவளையில் ஆலய தலைமை வண்ணக்கர் தன்மன்பிள்ளை - வாலயப்பிள்ளை தம்பதிகளுக்குப் புதல்வனாக 18.03.1939 ஆம் ஆண்டு பிறந்தார்.

ஆரம்பக் கல்வியை களுதாவளை இராமகிருஸ்ண வித்தியாலத்தில் கற்றார். இடைநிலைக் கல்வியை கல்லடி சிவானந்தா வித்தியாலயத்தில் ஆங்கில மொழி மூலம் பெற்றார். தொடர்ந்து உயர்தரக் கல்வியை மட்டக்களப்பு மெதடிஸ்த கல்லூரியில் பெற்றார். இக் காலப்பகுதியில் இவரது விவசாயம் சம்பந்தமான கட்டுரைகள், கவிதைகள் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்தார்.

எஸ்.எஸ்.சி. பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்தார். மேற்படிப்பை கண்டி பேராதனையில் அமைந்திருந்த சர்வதேச தரத்திலான விவசாயக்கல்லூரியில் மேற்கொண்டு தேறினார். பயிற்சி முடிந்து இரு மாதங்களில் தமது 20 ஆவது வயதில் நுவரெலியா உருளைக்கிழங்கு பண்ணையின் முகாமையாளராகப் பொறுப்பு வாய்ந்த தொழிலை 1959 ஆம் ஆண்டில் பெற்றார்.

இனக்கலவரம் தலைதூக்கிய காலம் இங்கு நூற்றுக்கு மேற்பட்ட தாய்மார்களும், யுவதிகளும் தொழில் புரிந்தனர். அனேகமானோர் சிங்களவர்கள், மிகவும் ஏழைகள், சம்பளமும் குறைவு. கடும் குளிரில் அதிகாலையில் இருந்தே தொழிற்படுவார்கள். அவர்களைச் சிறிது சிறிதாக சேமிக்கப் பழக்கினார். காலில் செருப்பு அணியவும், கையில் கைக் கடிகாரம் அணியவும், நவீன ஆடைகள் உடுக்கவும் பழக்கினார். இக் காலப் பகுதியில் ஜேர்மனி சென்று உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையில் பயிற்சி பெறச் சந்தர்ப்பம் கிடைத்தது.

அதனைத் தவிர்த்து தம்மாவட்டத்திற்கு சேவை செய்யும் நோக்கில் தமது கிராமம் வந்து பெற்றோருடன் இணைந்து கொண்டார். செங்கலடி, கல்முனை ஆகிய இடங்களில் விவசாயப் போதனாசிரியராக தொழில் புரிந்தார்.

1968ஆம் ஆண்டில் அமெரிக்க நாட்டின் புலமைப் பரிசில் பெற்று அமெரிக்கா, பிலிப்பைன்ஸ், ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளுக்குச் சென்று ஆறுமாத காலம் பயிற்சி பெற்றார். அமெரிக்கா அபிவிருத்தியும், முன்னேற்றமும் அடைந்த நாடாக இருந்தது. இவருடன் 35 நாடுகளைச் சேர்ந்த 101 பேர் கலந்து கொண்டனர். இவர்கள் வெவ்வேறு மொழி பேசுபவர்கள். அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றதும் உலக வங்கியின் அனுசரனையுடனாக உலக உணவுத்தாபனம், நியாப் ஆகிய நிறுவனங்களில் இணைந்து ஏழை மக்களின் உயர்வுக்காக உழைத்தார். 2004ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிட்டார். அமோக வாக்குகளால் வெற்றி பெற்றார். பல சவால்களுக்கு மத்தியில் 2010ஆம் ஆண்டு வரை தன்னால் ஆன சேவைகளைச் செய்தார். பலமுறை சபைக்கு தலைமை தாங்கினார். சகல உறுப்பினர்களுடனும் அமைச்சர்களுடனும் சுமுகமாகப் பழகினார்.

கடந்த 19.09.2025 ஆம் ஆண்டு வெள்ளிக்கிழமை மாலை தனது 86 ஆவது வயதில் அமரத்துவம் அடைந்தார்.

அன்னாரின் 31 ஆம் நாள் அந்தியேட்டி கிரியைகள் நாளை 19 ஞாயிற்றுக்கிழமை களுதாவளை இல்லத்தில் நடைபெறுகிறது.

**வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா**
காரைதீவு நிருபர்

---

## கனியமணல் கூட்டுத்தாபன ஊழியர்கள்

# நிலுவைச் சம்பளத்தைக் கோரி மூன்று நாள்களாக போராட்டம்

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை புல்மோட்டை கனிய மணல் கூட்டுத்தாபன ஊழியர்கள் சிலர் தமக்கு வழங்கப்படாத நிலுவைச் சம்பளத்தை கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மூன்றாவது நாளாகவும் இன்று (17) நிறுவனத்தின் முன்பாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.







# ஒரு நல்லாசிரியர் எல்லாவற்றையுமே சிறப்பாக மாற்றும் வல்லமை மிக்கவர்!

## யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் தெரிவிப்பு

ஒரு நல்ல கல்வி யாரையும் நல்லபடி மாற்றும். ஒரு நல்லாசிரியர் எல்லாவற்றையுமே சிறப்பானதாக மாற்றும் வல்லமை மிக்கவர். பிள்ளைகள் ஆசிரியர் என்ன கற்பிக்கிறார் என்பதனை விட அவர் எப்படியானவராக இருக்கிறார் என்பதிலிருந்தே அதிகளவு கற்றுக் கொள்கிறார்கள்.

சோலைக்குயில் அவைக்காற்றுக் களத்தின் 37 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மூன்று நூல்களின் வெளியீட்டு விழாவும் கோகிலா மகேந்திரன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (12) பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய கல்யாண மண்டபத்தில் இடம் பெற்றன.

தேன்குயில் மலரின் வெளியீட்டுரையில் யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எப்படி ஒரு ஆசிரியத்துவம் இருக்க வேண்டும் என்பதைச் சமூகத்துக்குச் சிறந்த வழிகாட்டியாக அமைந்த சிவத் தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியை முன்வைத்து கோகிலா மகேந்திரன் அம்மையார் தேன்குயிலின் முதலாவது கட்டுரையான “குருவும் கெழுவும் திறனாகும்மே” என்கிற வியப்புரையில் ஒரு விடயத்தை சிறப்பாக குறிப்பிடுகிறார்.

ஒரு நல்ல கல்வி யாரையும் நல்லபடி மாற்றும். ஒரு நல்லாசிரியர் எல்லாவற்றையுமே சிறப்பானதாக மாற்றும் வல்லமை மிக்கவர். பிள்ளைகள் ஆசிரியர் என்ன கற்பிக்கிறார் என்பதனை விட அவர் எப்படியானவராக இருக்கிறார் என்பதிலிருந்தே அதிகளவு கற்றுக் கொள்கிறார்கள்.

கற்பித்தலில் ஆசையுள்ள ஆசிரியர்கள் தங்கள் இறுதிக் காலம்வரை தொடர்ந்து கற்கும் பண்புள்ளவர்களாக இருக்கிறார்கள். அவரிடம் கற்கும் மாணவர்கள் கற்பதில் ஆர்வமுடையவர்களாகிறார்கள். இவை ஆசிரியத்துவம் பற்றிய நவீன கால சிந்தனைகள் என்று குறிப்பிடுகிறார். ஒரு நல்லாசிரியர் எப்படி இருக்க வேண்டும்? அது கற்றல் கற்பித்தலுக்கும் அப்பால் முன்மாதிரி வாழ்விலிருந்து ஆரம்பமாகிறது என்பதை இந்தக் கட்டுரையில் சொல்லியிருக்கிறார்.

கோகிலா மகேந்திரன் அம்மையார் எப்போதுமே தனது முன்மாதிரியான செயற்பாடுகள் மூலமாக மாணவர் சமூகத்துக்குப் பெரிய வழிகாட்டியாக இருந்திருக்கிறார் என்பதை அவருடைய அறிவுரைகளிலும் பார்க்க அவரது செயற்பாட்டுத்தளம் எங்களுக்கு எப்போதும் எடுத்துக் கூறி வந்திருக்கிறது. அவர் செயற்படுகின்ற ஆசிரியராக இருந்திருக்கிறார். வெறுமனே கற்றல் கற்பித்தல் என்கின்ற வகுப்பறைக் கோட்பாடுகளுக்கு அப்பால் அந்த ஆளுமைச் சிறப்பையும் வளர்ச்சியையும் எப்படி மாணவர்களிடம் வளர்க்க வேண்டும் என்பதில் பல்வேறு பரீட்ச்சார்த்த முயற்சிகளைச் செயற்படுத்திப் பார்ப்பவராக இருந்திருக்கிறார்.

பதின்மவயது மாணவர்களும் அவர்களின் ஆசிரியர்களும் என்கிற அவரது இன்னொரு கட்டுரையில் பதின்ம வயதினர் தேடுகின்ற அவர்களின் கண்களுக்கு தெரிகின்ற ரோல் மொடலாக ஆசிரியர்கள் இருக்க வேண்டும். ஆசிரியர்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் முறைகளையும், முடிவெடுக்கும் முறைகளையும், உணர்ச்சிகளை கையாளும் முறைகளையும் மாணவர்கள் நேரே பார்க்கிறார்கள். ஆசிரியர்கள் தாங்கள் எங்காவது தவறு செய்திருந்தால் மன்னிப்புக் கேட்கவும் தயங்க வேண்டியதில்லை. தங்களுக்கு தெரியாத விடயத்தை உண்மையிலேயே தெரியாது எனக் கூறிவிட்டு செல்லும் போது மாணவர்களிடத்தில் அந்த ஆசிரியரின் பிம்பம் உயர்கிறது.

இன்றைக்கு எல்லாம் தெரிந்தவர்களாக இருக்கின்ற அல்லது அதனை ஒரு தோற்றமாக காட்டுகின்ற போக்கிலிருந்து மாறுபட்டு தெரியாததை கற்றுக் கொண்டு வெளிப்படுத்தல் முக்கியமானது. ஆசிரியரை மாணவர்களுக்கு பிடிக்குமாயின் பெறுபேறுகள் மாத்திரமல்ல மாணவர்களின் எதிர்கால ஆளுமையும் வாழ்க்கையும் கூட சிறப்பாக வரும். அதே நேரம் தனக்குப் பிடிக்காத ஆசிரியரிடமிருந்து மாணவன் எதையுமே கற்றுக் கொள்வதில்லை என்கிறார். ஆகவே நாங்கள் வகுப்பறைகளுக்கு, விரிவுரை மண்டபங்களுக்கு செல்லும் போது எப்படி நாங்கள் எங்களை மாணவர்கள் முன் வெளிப்படுத்தப் போகிறோம். எங்களுடைய தோற்றம், நாங்கள் நடந்து கொள்ளும் முறை, எங்களின் செயற்பாடுகள் என அனைத்திலுமே தங்கியிருக்கிறது என்கிற இந்த விடயங்கள் யாவுமே இந்தக் கட்டுரையிலே முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

சோலைக்குயில் அவைக்காற்றுக் காலத்தின் நிறுவனரான கோகிலா மகேந்திரனும், அவரைத் தொடர்ச்சியாக அணுகிக் கொண்டிருக்கும் மாணவர்கள், அவரது நடப்புலகம் இணைந்து உருவாக்கிய இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ள விதம் என்னை ஆச்சரியப்படுத்துகிறது.

நான் இன்று படைப்பாக்கங்களில் ஆர்வத்தைக் கொண்டிருக்கிறேன் என்றால் அதற்கு மிகவும் அடித்தளமிட்ட பெருந்தகைகளில் கோகிலா அம்மையாரை மறந்துவிட முடியாது.– என்றார்.





# சாய்ந்தமருதில் களைகட்டிய 'ஷம்ஸ் ஓவிய கண்காட்சி'!

( காரை சகா)

சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலய "ஷம்ஸ் ஓவிய கண் காட்சி" கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் இன்று (17) வரை நான்கு தினங்களாக நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் திருமதி நஸ் ரின் றிப்கா அன்சார் தலைமையில் நடைபெற்ற இந்த நான்கு நாள் தொடர் ஓவியக் கண்காட்சியைக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர் கள், மாணவர்கள் எனப் பல தரப்பினரும் பார்வையிட்டு வந்தனர்.

அதிபர் திருமதி நஸ்ரின் றிப்கா அன்சாரின் அழைப்பையேற்று இன்று (17) வெள்ளிக்கிழமை அம்பாறை மாவட்ட செயலகத்தின் பிரதம பொறியிய லாளர் ஏ.எம்.ஷாஹிர் மற்றும் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகா தேவராஜா ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு பார்வையிட்டனர்.

அதிபருடன் சித்திர பாட பொறுப் பாசிரியர் திருமதி எஸ்.நஸீகா பர்வின் குறித்த கண்காட்சியை பார்வையிட வழிப்படுத்தினார்.

தரம் 9 முதல் உயர்தர வகுப்புகள் வரையிலான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் படைப்புகள் அழகாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.





# வாய்பேச முடியாத இளம் பெண்ணை நள்ளிரவில் வீடு புகுந்து பலாத்காரம் செய்ய முயன்ற நபர் கைது

## சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு

வாய்பேச முடியாத இளம் பெண் ஒருவரை நள்ளிரவில் வீடு புகுந்து பாலியல் பலாத்காரம் செய்ய முற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் கூறப்படுவதாவது:-

அல்லைப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய வாய்பேச முடியாத பெண் ஒருவர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப் படையில் அந்த நபர் கடந்த செவ்வாய் நள்ளிரவு 11.30 மணியளவில் அல்லைப் பிட்டி கடற்பரப்பில் வைத்து ஊர்கா வற்றுறை பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி சம்பந் தப்பட்ட பெண் வீட்டில் இருந்த சந்தர்ப் பத்தில் சந்தேகநபர் வீட்டிற்குள் புகுந்து அந்தப் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ய முற்பட்டுள்ளார் என்று கூறப் படுகின்றது.

எனினும் அவரிடம் இருந்து அந்த பெண் தப்பிச் சென்று தமது உறவினர் களுக்கு அறியப்படுத்திய நிலையில், பெண்ணின் உறவினர்களால் பொலி ஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சந்தேகநபர் தலை மறைவாகியிருந்தார். அவரை தேடி பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட் டிருந்தனர். இந்நிலையிலேயே சந்தேக நபர் அல்லைப்பிட்டி கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டார் எனக் கூறப்ப டுகின்றது.

இதனை அடுத்து சந்தேகநபர் நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவரை எதிர்வரும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.





# மட்டு. நகரில் இரு ஆடை விற்பனை நிலையங்களுக்கு இடையே ஏற்பட்ட கைகலப்பில் மூவருக்குப் படுகாயம்

## ஒருவர் கைது; மற்றைய இரண்டு பேர் தலைமறைவு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகரில் வீதியால் செல்வோரை தமது கடைக்கு வாருங்கள் என ஏட்டிக்குப் போட்டியாக கூப்பிட்டு வரும் இரு ஆடைகள் விற்பனை வர்த்த நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் கூரிய ஆயுதத்தால் தாக்குதலுக்கு உள்ளாகி 3 பேர் படுகாயமடைந்துள்ள சம்பவம் தொடர்பாக ஒருவரை நேற்று வியாழக்கிழமை தாங்கள் கைது செய்துள்ளனர் என்றும், இது தொடர்பில் மற்றும் இருவர் தலைமறைவாகியுள்ளனர் என்வும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றி தெரியவருவதாவது:-

நகரில் கோட்டைமுனை பாலத்துக்கு அருகில், பக்கத்துக்குப் பக்கம் அமைந்துள்ள இரு ஆடை விற்பனை வர்த்தக நிலையங்களின் முன்னால் அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் வீதியால் போவோரை தனது கடைக்கு வருமாறு ஏட்டிக்கு போட்டியாக கூப்பிட்டு வந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை பகல் வீதியால் போவோரை கூப்பிடும் போது இரு கடைகளில் பணிபுரிந்துவரும் ஊழியர்களுக்கும் இடையே வாய் தர்க்கம் ஏற்பட்டதையடுத்து கைகலப்பு ஏற்பட்டது. கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் இரு பகுதியையும் சேர்ந்த 3 பேர் படுகாயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக நேற்று வியாழக்கிழமை ஒருவரைத் தாங்கள் கைது செய்துள்ளமையுடன் இருவர் தலைமறைவாகியுள்ளனர் எனவும், கைது செய்யப்பட்டவரை இன்று வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 127 மாணவர்கள் பாராட்டிக் கௌரவிப்பு!

## திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் சசிகுமார் ஏற்பாடு

திருக்கோவில் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 127 மாணவர்களும் அவர்களுக்கு கற்பித்த 40 ஆசிரியர்களும் நேற்று (16) திருக்கோவில் பிரதேச சபை தவிசாளரால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

திருக்கோவில் பிரதேச சபையின் தவிசாளரும், அம்பாறை மாவட்ட தமிழர் ஒன்றியத்தின் தலைவருமான எஸ். சசிக்குமாரின் தலைமையில் தம்பிலுவில் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பேராசிரியர் எஸ்.குணபாலன், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எஸ்.கரன் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

திருக்கோவில் பிரதேச சபையின் உதவித் தவிசாளர் வரதராஜன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், கல்வி அதிகாரிகள், ஓய்வு பெற்ற அதிபர்கள், வங்கி முகாமையாளர்கள், மத போதகர்கள், தவிசாளர் சு.சசிகுமாரின் துணைவியார் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இதன்போது புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 127 மாணவர்களும் 40 ஆசிரியர்களும் அதிதிகளால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டதுடன் சகல மாணவர்களுக்கும் 5000 ரூபா வங்கியில் வைப்பிலிடப்பட்டு சேமிப்பு கணக்குப் புத்தகம், பரிசுப் பொருட்கள் என்பனவும் வழங்கப்பட்டன. அத்துடன் அம் மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களும் பணப்பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகள் இவ்விழாவை ஏற்பாடு செய்த தவிசாளரும், தொழிலதிபருமான சசி குமாரை பாராட்டிப் பேசினர்.












# இயற்கைச் சுவரின் உயிர் மொழி!

‘மரம் நட்டவன் மண் காக்கிறான் மண் காக்கிறவன் வாழ்க்கை காக்கிறான்’ என்ற சொற்றொடரானது உயிர் வேலியின் முக்கியத்துவத்தை விளக்குகின்றது. கிராமிய வாழ்க்கையின் ஒரு பிரிக்க முடியாத அங்கமாக உயிர் வேலிகள் காணப்படுகின்றன. மரங்கள் செடிகள், கொடிகள் போன்ற தாவரங்களை வைத்து உருவாக்கப்படும் உயிர்வேலி ஒரு கிராமத்தின் அழகையும் அதன் சுற்றுச்சூழல் சமநிலையையும் பாதுகாக்கின்றது. உதாரணமாக முள்ளுள்ள கள்ளி, கிளுவை, பூவரசு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வேலியானது வெறுமனவே நில எல்லைக்கான அடையாளம் மட்டுமல்ல கிராம மக்களின் வாழ்வாதாரத்தையும், கலாசாரத்தையும், இயற்கையின் ஒற்றுமையையும் பிரதிபலிக்கின்றது.

ஆரம்ப காலங்களில் ஒவ்வொரு கிராமத்தின் எல்லைகளிலும், விவசாய நிலங்களின் ஓரங்களிலும் உயிர்வேலிகள் காணப்பட்டன. அவை மண்ணரிப்பைத் தடுக்கவும், காற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்தவும், நிலத்தடிநீரைப்பாதுகாக்கவும்பெரும்பங்குவகிக்கின்றன. மேலும் பறவைகள், தேனீக்கள், சிறு விலங்குகள் போன்ற பல உயிரினங்களுக்குத் தங்குமிடமாகக் காணப்படுகின்றன. இவ் உயிரினங்கள் விவசாயத்துக்குத் தேவையான இயற்கை மகரந்த பரவலில் செல்வாக்குச் செலுத்துகிறது. இதனால் பயிர்களின் விளைச்சல் அதிகரிக்கின்றது.

மக்களின் வாழ்க்கை சுழற்சியுடனும் உயர்வேலி நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது என்றால் மிகையாகாது. இந்த மரங்கள் ஆடு, மாடு போன்றவற்றுக்கு உணவாக காணப்படுகின்றன. பெருச்சாலி, எலி போன்றவற்றைக் கலைப்பதற்கு கள்ளி என்ற உயிர்வேலி பயன்படுத்தப்படுகின்றது. குறிப்பாக அதன் இலைகளைப் பறித்து அது சென்று வருகின்ற இடங்களில் போடுகின்ற போது அதன் மணத்தை அறிந்து அது அவ்விடத்திலிருந்து சென்றுவிடும் என்ற நம்பிக்கை கிராமப்புற மக்களிடையே காணப்படுகின்றது. இவ் உத்தி இன்றும் சில இடங்களில் பயன்படுத்துகின்றது. மேலும் விறகுக்காகவும், சிலவகைத் தாவரங்கள் மருந்துக்காகவும், நிழலுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

ஆனாலும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட அபரிதமான மாற்றம் இன்று உயிர்வேலிகளைக் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளன.

அதிலும் விவசாய இயந்திரங்கள் உயிர்வேலியின் அழிவுக்கு வழிகோலுகின்றன. ஆரம்ப காலங்களில் விவசாயிகள் கையால் அல்லது சிறு இயந்திரத்தை பயன்படுத்தி விவசாயம் மேற்கொண்டதால் நில எல்லைப்புறங்களில் உயிர்வேலிகள் பாதுகாக்கப்பட்டன. ஆனால் தற்காலத்தில் பெரிய உழவு இயந்திரங்கள், அறுவடை இயந்திரங்கள் போன்றவற்றை விவசாயத்தில் பயன்படுத்தப்படுவதால் நிலங்களில் மரங்கள் இருந்தால் இயக்குவதற்கு சிரமம் என்று அவற்றை அகற்றிவிட்டு தமது வேலைகளைத் துரிதப்படுத்துகின்றனர். இதன் விளைவாக உயிர்வேலிகள் மெதுவாக அழிவடைந்து செல்லுகின்றன.

நகரமயமாக்கல் காரணமாகவும் உயிர்வேலிகள் அழிவடைகின்றன. குறிப்பாக நவீன கட்டுமானம் மற்றும் பாதுகாப்பு முறைகளினால் உயிர்வேலிகள் மாற்றியுள்ளன எனலாம்.

கிராமங்களிலும் கூட கம்பி வேலிகள், சிமெண்ட் சுவர் போன்ற செயற்கைப் பாதுகாப்பு அரண்கள் உயிர்வேலிகளுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் இயற்கை பசுமை குறைந்து, நிலத்தின் ஈரப்பதம் மற்றும் உயிர் வளம் பாதிக்கப்படுகின்றது . மேலும் நகரமயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான நில அபிவிருத்தி உயிர்வேலிகளின் அழிவை மேலும் வேகப்படுத்தியுள்ளது. நிலங்கள் வீடுகள், தொழிற்சாலைகள், சாலைகள் போன்றவற்றுக்காக பயன்படுத்தப்படுவதனால் இயற்கை வேலிகள் அழிக்கப்படுகின்றன இவ்வாறான பல காரணிகளால் உயிர்வேலிகள் அழிவடைந்து செல்கின்றன.

இந்த நிலைமை மாற வேண்டுமென்றால் ஒவ்வொரு மனிதனும் உயிர்வேலிகளை உருவாக்க வேண்டும். பாடசாலைகள், விவசாயக் குழுக்கள், சுற்றுச்சூழல் அமைப்புடன் இணைந்து பசுமை வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் உயிர் வேலிகளைப் பாதுகாக்க முடியும். இவ்வேலியானது கிராம மக்களின் வாழ்க்கையையும் இயற்கையும் இணைக்கும் பசுமைப் பலமாகும். அதனைக் காப்பது ஒவ்வொருவருடைய பொறுப்பு மட்டுமல்ல பசுமையான எதிர்காலத்துக்கான முதலீடும் ஆகும். எனவே இயற்கையோடு இணைந்து நிலையான எதிர்காலத்தை உருவாக்குவோம்.



**நா.உசாந்தினி,**
ஊடகக்கற்கைகள் துறை,
3 ஆம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.



# வெள்ளை முட்டை விலை குறைந்தது!

**(பாறுக் ஷிஹான்)**

வெள்ளை முட்டை ஒன்றின் விலை 25 ரூபாவாகவும் சிறிய வெள்ளை முட்டை ஒன்றின் விலை 20 ரூபாவாகவும் அம்பாறை மாவட்டத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

குறிப்பாக வாகனங்களில் வெளி மாவட்டங்களில் இருந்து சிறிய வண்டிகள் மூலமாக எடுத்த வரப்பட்டுள்ள முட்டைகள் அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு சந்தி, கல்முனை மாநகர பிரதேசங்களில் முக்கிய சந்திகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்த முட்டை வகைகளை மக்கள் ஆர்வத்துடன் கொள்வனவு செய்து வருவதைக் காண முடிகின்றது.

எதிர்வரும் தீபாவளி தினத்தை முன்னிட்டு இவ்வாறு வாடிக்கையாளர்களுக்கு குறைந்த விலையில் முட்டைகளை விற்பனை செய்வதாக முட்டை விற்பனையில் ஈடுபட்டவர்கள் குறிப்பிட்டனர்.







# ரயில் கடவை எதுவும் அமைக்கப்படாமையால் போக்குவரத்துச் சிக்கலில் பேசாலை மக்கள்!

## நிலமைகளை நேரில் சென்று ஆராய்ந்தார் ரவிகரன் எம்.பி.

(விஜயரத்தினம் சரவணன்)

மன்னார் பேசாலை வடக்கு மற்றும் பேசாலை தெற்கு பகுதிகளைப் பிரிக்கும் வகையில் அமைந்துள்ள ரயில் தடத்தைக் கடந்து பயணிப்பதற்கு ஒரேயொரு ரயில்வே கடவை மாத்திரம் காணப்படுவதால் பேசாலை மக்கள் பலத்த போக்குவரத்து இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த நிலையில் அந்தப் பகுதி மக்களின் முறையீட்டுக்கு அமைய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குறித்த பகுதிக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு நிலமைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளார்.

குறிப்பாக பேசாலை வடக்கு மற்றும் பேசாலை தெற்கு பகுதிகளைப் பிரிக்கும் ரயில் தடத்தை கடப்பதற்கு ஒரேயொரு ரயில் கடவை காணப்படுவதால் பேசாலை தெற்குப் பகுதியில் இருந்து பாத்திமா மத்திய மகாவித்தியாலயம், சென்மேரிஸ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு வருகை தருகின்ற 150 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் நீண்டதூரம் பயணம் செய்து பாடசாலைக்குச் செல்லவேண்டியிருப்பதாக இதன்போது பேசாலைக் கிராம மக்களால் நாடாளு மன்ற உறுப்பினரிடம் முறையீடு செய்யப்பட்டது.

அத்தோடு பொதுமக்களும் பலத்த போக்குவரத்து நெருக்கடிகளுக்கு ஆளாகி வருகின்றனர் என்றும் இதன்போது மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

எனவே இந்தப் போக்குவரத்து நெருக்கடிகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டு பேசாலை பாப்பரசர் வீதியில் ரயில் கடவை ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேசாலைக் கிராம மக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதுதவிர பேசாலைக் கிராமத்தில் சீரின்றிக் காணப்படும் உள்ளக வீதிகளைச் சீரமைப்பது தொடர்பிலும் இதன்போது கிராம மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பேசாலை மக்களின் கோரிக்கைகள் மற்றும் குறைபாடுகளைக் கேட்டறிந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் தம்மால் கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவித்திருந்தார்.

மன்னார் பிரதேச சபை உறுப்பினர் கிறிஸ்ரி றெவல், மன்னார் நகர சபை உறுப்பினர் சோமநாதன் பிரசாத் ஆகியோரும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனும் இந்தக் களவிஜயத்தில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மட்டுவில் வில்சன் சனசமூக நிலைய ஏற்பாட்டில் முதியோர் தின நிகழ்வுகள்

(த.சுபேசன்)

தென்மராட்சி மட்டுவில் கிழக்கு வில்சன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் முதியோர் தின நிகழ்வுகள் அண்மையில் இளஞ்சிட்டுக்கள் சிறுவர் கழக மைதானத்தில் சனசமூக நிலையத் தலைவர் வ.தவராசா தலைமையில் இடம்பெற்றது.

முதியோர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் பொ.குகதாசனும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகராட்சி மன்ற சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.செல்வராணி, ஓய்வுபெற்ற கதிரியக்க தொழில்நுட்ப வல்லுனர் கருணைவேல், ஓய்வுபெற்ற தகவல் தொழில்நுட்ப விரிவுரையாளர் திருமதி க.மைதிலி மற்றும் கைதடி சேதுகாவலர் வித்தியாலய அதிபர் செ.ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.





# ட்ரம்புடன் பிரதமர் மோடி பேசவில்லை: வெளியுறவுத் துறை மீண்டும் விளக்கம்

ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதன் மூலம் உக்ரைன் மீதான போரை இந்தியா மறைமுகமாக ஆதரித்து வருவதாக அமெரிக்கா தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறது.

இந்த நிலையில், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் கொள்முதலை படிப்படியாக நிறுத்துவதாக பிரதமர் நரேந்திர மோடி தன்னிடம் உறுதி அளித்துள்ளார் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த விடயம் தொடர்பில், மத்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரந்திர் ஜெய்ஸ்வால் கூறுகையில்,

“கச்சா எண்ணெய் விவகாரத்தில் அமெரிக்காவின் கருத்து குறித்து ஏற்கெனவே அறிக்கையை வெளியிட்டுள்ளோம்.

ரஷ்யாவிலிருந்து கச்சா எண்ணெயை கொள்முதல் செய்வது தொடர்பாக பிரதமர் மோடிக்கும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கும் இடையே எந்தவிதமான உரையாடலும் நடக்கவில்லை என்பது மட்டும் உறுதி.” - என்றார்.

# கோவாவில் கடற்படை வீரர்களுடன் தீபாவளி கொண்டாடவுள்ளார் மோடி

கடந்த 2014 ஆம் ஆண்டு இந்தியாவின் பிரதமராக பொறுப்பேற்றதிலிருந்து பிரதமர் மோடி இராணுவத்தினருடன் தீபாவளி கொண்டாடுவதை வழக்கமாக கடைபிடித்து வருகிறார்.

அந்த வகையில், பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு எதிராக இராணுவம் மேற்கொண்ட ஒபரேஷன் சிந்தூரின் சிறப்பான வெற்றியைக் கொண்டாட பிரதமர் மோடி முடிவு செய்துள்ளார். அதனால், இந்த ஆண்டு தீபாவளியை கோவா கடற்கரையில் கடற்படை வீரர்களுடன் இணைந்து



கொண்டாட பிரதமர் முடிவு செய்துள்ளார் என கூறப்படுகிறது.

கடந்த 2014 இல் லடாக்கில் உள்ள சியாச்சின் பனிப்பிரதேசத்துக்கு சென்ற அவர், அங்கு பாதுகாப்புப் படையினருடன் இணைந்து தீபாவளி கொண்டாடினார்.

2015 இல், 1965 ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தியா-பாகிஸ்தான் போரில் இந்திய வீரர்களின் தியாகத்தை போற்றும் வகையில் பஞ்சாப் அமிர்தசரஸில் உள்ள டோக்ராய் போர் நினைவுச் சின்னத்தில் நடைபெற்ற தீபாவளி கொண்டாடத்தில் பிரதமர் பங்கேற்றார். 2024 இல் குஜராத்தின் சர்க்ரீக்கில் இராணுவத்தினருடன் தீபாவளியை கொண்டாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆகாஷ் வான் பாதுகாப்புகளை பிரேசிலுக்கு வழங்கும் இந்தியா

வான் பாதுகாப்பு வழங்கும் ஆகாஷ் ஏவுகணைகளை பிரேசிலுக்கு இந்தியா வழங்க உள்ளது.

ஆகாஷ் ஏவுகணை இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட வான் பாதுகாப்பு அமைப்பாகும். தரையில் இருந்து வான் இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கி அழிக்கும் திறன் கொண்டது ஆகாஷ். இந்த ஏவுகணைகள் எதிரி நாடுகளின் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள், ட்ரோன்களை வான்வெளியிலேயே இடைமறித்து அழிக்கும். இதுபோன்ற ஏவுகணைகளை வாங்க பல நாடுகளும் ஆர்வம் காட்டி வருகின்றன.

இந்நிலையில், பிரேசிலும் இந்தியாவும் இருதரப்பு பாதுகாப்புத் துறையில் இணைந்து செயல்பட ஏற்கெனவே முடிவெடுத்துள்ளன. அதன்



ஒரு கட்டமாக ஆயுதங்களை இணைந்து தயாரிக்க, மேம்படுத்த இரு நாடுகளும் திட்டமிட்டுள்ளன. இந்நிலையில், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஆகாஷ் ஏவுகணைகளை பிரேசிலுக்கு வழங்க மத்திய அரசு நேற்று முன்தினம் ஒப்புதல் வழங்கி உள்ளது.

பிரேசில் துணை ஜனாதிபதி ஜெரால்டோ அல்க்மின், பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜோஸ் முசியோ மான்டீரோ பில்ஹோ ஆகியோர் டில்லி வந்துள்ளனர். மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கை அவர்கள் நேற்று முன்தினம் சந்தித்து இருதரப்பு பாதுகாப்புத் துறைகள் இணைந்து மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினர்.

இதுகுறித்து பாதுகாப்புத் துறை அதிகாரிகள் கூறும்போது,

“இந்தியாவும் பிரேசிலும் பாதுகாப்புத் துறையில் இணைந்து செயல்பட உள்ளன. அதற்கேற்ப பிரேசிலுக்கு ஆகாஷ் ஏவுகணைகளை இந்தியா வழங்கும். இந்த ஏவுகணைகள் எதிரிகளின் போர் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள், ட்ரோன்களை வான் வெளியில் 25 கிலோ மீற்றர் தூரத்திலேயே தாக்கி அழிக்கும்.” - என்றனர்.



# பாகிஸ்தானின் பீரங்கிகளை கைப்பற்றி ஊர்வலமாகச் சென்ற ஆப்கன் வீரர்கள்

பாகிஸ்தானுக்கு சொந்தமான இராணுவ ராங்கிகளை ஆப்கானிஸ்தான் இராணுவம் கைப்பற்றியுள்ளதாக தலிபான் செய்தித்தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாகித் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் எக்ஸ் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில்,

“எல்லைப் பகுதிகளில் பாகிஸ்தான் நடத்திய துப்பாக்கிச் சூட்டுக்கு ஆப்கானிய படைகள் தகுந்த பதிலடி கொடுத்தன. இதில், ஏராளமான பாகிஸ்தான் வீரர்கள் கொல்லப்பட்டனர். பாகிஸ்தானுக்கு சொந்தமான இராணுவ ராங்கிகள் மற்றும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. பாகிஸ்தானின் இராணுவ கட்டமைப்புகளை ஆப்கன் படைகள் அழித்துவிட்டன.” என்று தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் இடையே 48 மணி நேர போர் நிறுத்தத்துக்கு ஒப்புக் கொள்வதற்கு முன்பு ஆப்கானிஸ்தானின் தென்கிழக்கில் உள்ள ஸ்பின் போல்டாக் மாகாணத்தின் தெருக்களில் பாகிஸ்தானிடமிருந்து கைப்பற்ற பட்ட இராணுவ ராங்கிகள் அணிவகுத்து செல்வதாக கூறப்படும் காணொலி சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாகின.

ஆனால், இதனை பாகிஸ்தான் மறுத்துள்ளது. காணொலிகளில் காணப்படும் ராங்கிகள் தங்கள் இராணுவத்துக்கு சொந்தமானது இல்லை என்று கூறியுள்ளது. இது குறித்து ஜியோ நியூஸுக்கு அளித்த பேட்டியின் போது பாகிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் கூறுகையில்,

“அவர்கள் பாகிஸ்தான் இராணுவ ராங்கிகளை கைப்பற்றியதாக காணொலிகளை காட்டுகின்றனர். ஆனால், அது எங்களுக்கு சொந்தமானது இல்லை. அதனை அவர்கள் ஏதாவது பழைய இரும்புக்கடையிலிருந்து வாங்கியிருக்கலாம்.” என்றார்.a









# இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹவுதிகளின் தளபதி மரணம்

யேமனின் ஹவுதி கிளர்ச்சிப்படையின் தலைவர்களைக் குறிவைத்து, இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹவுதிகளின் தலைமைத் தளபதி கொல்லப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

யேமனின் ஹவுதி கிளர்ச்சிப்படையின் முக்கிய தலைவர்களைக் குறிவைத்து, கடந்த ஓகஸ்ட் மாதம் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதலில், படுகாயமடைந்த ஹவுதிகளின் தலைமைத் தளபதி மேஜர். ஜெனரல். முஹம்மது அப்துல் கரீம் அல் - கமாரி உயிரிழந்துள்ளார் என நேற்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யேமனில், பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரினால் மேஜர். ஜெனரல். முஹம்மது அப்துல் கரீம் அல் - கமாரியின் மீது ஐ.நா. பல முக்கிய தடைகளை விதித்திருந்தது.

முன்னதாக, காஸா மீதான இஸ்ரேலின் போரில், பாலஸ்தீனர்களுக்கு ஆதரவாக, இஸ்ரேல் மீது ஹவுதிகள் தாக்குதல் நடத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த ஓகஸ்ட் மாதம் இஸ்ரேல் நடத்திய வான்வெளி தாக்குதலில் ஹவுதி அமைப்பின் பிரதமர் உட்பட பலர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு

வெள்ளிக்கிழமை | 17/10/2025

கனடாவில் தேடப்பட்டு வந்த குற்றவாளி ஒருவர் கைதானார்



02






# கனடாவில் இந்திய நகைச்சுவை நடிகரின் உணவகம் மீது மீண்டும் துப்பாக்கிச்சூடு

கனடாவில் இந்திய நகைச்சுவை நடிகர் கபில் சர்மாவிற்கு சொந்தமான உணவகத்தின் மீது மீண்டும் துப்பாக்கிச்சூடு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது கடந்த 4 மாதங்களில் நடந்த மூன்றாவது தாக்குதலாகும்.

இந்தியாவின் பஞ்சாபில் பிறந்து வளர்ந்த கபில் சர்மாவிற்கு,கனடாவின் சர்ரேயில் சொந்தமாக கப்ஸ் கபே என்ற உணவகம் உள்ளது. இங்கு கடந்த நான்கு மாதங்களில் மூன்றாம் முறையாக துப்பாக்கிச்சூடு தாக்குதல் நடந்துள்ளது. ஆனால் யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

முதல் துப்பாக்கிச்சூடு ஜூலை 10 ஆம் திகதியும், 2 ஆவது துப்பாக்கிச்சூடு ஓகஸ்ட் 7 ஆம் திகதியும் நடந்த நிலையில் தற்போது 3 ஆவதாக துப்பாக்கிச்சூடு தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

இந்த துப்பாக்கிச்சூடு சம்பவம், சர்வதேச குற்றவாளியான லோரன்ஸ் பிஷ்னோயின் கும்பலால் நடத்தப்பட்டதாக கூறி, குல்வீர் சித்து, கோல்டி தில்லான் என்ற இருவர், சமூக ஊடகப் பதிவில் பொறுப்பேற்றுள்ளனர்.இந்தச் சம்பவம் தொடர்பாக சர்ரே பொலிஸார் சி.சி.டி.வி. காட்சிகளை ஆய்வு செய்து சாட்சிகளை விசாரித்து வருகின்றனர்.

# கனடாவில் பாடசாலைகளில் பன்றி இறைச்சிக்கு தடையா?



கனடாவின் ஒன்டாரியோ மற்றும் பிற மாகாணங்களில் பாடசாலைகளில் பன்றி இறைச்சி தடைசெய்யப்பட்டது என கூறிய சமூக வலைத்தளத்தில் காணொளி ஒன்று வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், இத்தகைய மின்னஞ்சல் அல்லது தடை உத்தரவு எதுவும் இல்லை என அதிகாரிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

உங்கள் குழந்தையின் ஆசிரியர், மற்ற மத மாணவர்களை புண்படுத்தக்கூடும் என்பதால், உங்கள் குழந்தையின் மதிய உணவில் பன்றி இறைச்சி வைக்க வேண்டாம் என்று மின்னஞ்சல் அனுப்புவதாக கற்பனை செய்யுங்கள் என காணொலியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த காணொலி 6 லட்சத்திற்கும் மேற்பட்ட பார்வைகளைப் பெற்றது. சில சமூக ஊடக பயனர்கள் இதை முஸ்லிம் மாணவர்களை கருத்தில் கொண்டு பன்றி இறைச்சி தடை என தவறாக பகிர்ந்தனர்.

ஆனால், கால்கரி கல்வி வாரியம் மற்றும் டொராண்டோ மாவட்ட கல்வி வாரியம் இரண்டும் இந்தக் கூற்றை முற்றிலும் மறுத்துள்ளன. இந்த வதந்தி குறித்து எங்களுக்குத் தெரியாது.

எங்களது பள்ளிகள் ஒக்டோபர் 6 முதல் ஆசிரியர் சங்க வேலைநிறுத்தம் காரணமாக மூடப்பட்டுள்ளன. பெற்றோர்கள் தங்கள் குழந்தைக்கு எதை உணவாக கொண்டுவருவது என்பது அவர்களின் தீர்மானம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கனடாவில் தேடப்பட்டு வந்த குற்றவாளி ஒருவர் கைதானார்

கனடாவின் மிகவும் தேடப்பட்ட குற்றவாளிகளில் ஒருவரான பியெரி பிலோஜீனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிலோஜீன் 2021 டிசம்பர் 22 அன்று சார்ல்ஸ்-ஒலிவியர் புஷேர் சவார்ட் என்பவரை கொலை செய்த வழக்கில் முதல் நிலை கொலைக்கான குற்றச் சாட்டில் தேடப்பட்டு வந்தார் என மான்ட்ரியால் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

அவர் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் சர்ரே பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்யப்பட்டார்.

பொதுமக்களிடமிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் பிலோ ஜீனை பிடித்ததாகவும், குறுகிய துரத்த லுக்குப் பிறகு வான்கூவர் பொலிஸின்



உதவியுடன் அவர் கைது செய்யப்பட் டார் என மெட்ரோ வான்கூவர் போக் குவரத்து பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

அவரிடமிருந்து போலி அடையாள ஆவணங்களும் கைப்பற்றப்பட்டன எனவும் தெரிவித்தனர்.

பிலோஜீனுக்கு எதிராக சட்டவி ரோத அடையாள ஆவணங்கள் வைத் திருந்த குற்றச்சாட்டு உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

அவர் விரைவில் மான்ட்ரியாலுக் குக் கொண்டு செல்லப்பட்டு, கொலை வழக்கில் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட உள்ளார்.

பிலோஜீன், கனடிய மத்திய அர சாங்கத்தின் BOLO (Be On the Look Out) திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட கனடாவின் மிகுந்த தேடப்பட்ட 25 குற்றவாளிகளின் பட்டியலில் இடம் பெற்ற ஆறு கியூபெக் மாகாண குற்ற வாளிகளில் ஒருவராவர் என்பது குறிப்பிடத்தக்கது.





# இந்தியர்களை இனரீதியாக விமர்சித்த கனேடிய பெண் பொலிஸாரால் கைது

இந்தியர்களைக் குறிவைத்து இனவெறுப்பு செயலில் ஈடுபட்ட கனேடிய பெண் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

கனடாவின் கிரேட்டர் ரொரன்றோ பகுதியில், Mississauga நகரில் அமைந் துள்ள சிறுவர் பூங்கா ஒன்றில், இந்தி யர்களை இனரீதியாக மோசமாக விமர்சிக்கும் வாசகம் ஒன்று எழுதப்பட் டிருந்தது.

இந்நிலையில், அந்த விடயம் தொடர் பில் Freda Looker-Rilloraza (வயது 29) என்னும் கனேடியப் பெண்ணை பொலி



ஸார் கைது செய்துள்ளனர்.

கனடாவில் சமீப காலமாக, இந்தியர் களுக்கு எதிரான இனவெறுப்பு அதிக ரித்துவருகிறது. சமீபத்தில், இந்திய வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே இனவெறுப்பு தாக்குதலுக்கு உள்ளானார்.

இந்திய வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினரான ஹர்தீப் க்ரேவால், தனது குடும்பத்துடன் Muskoka என்னு மிடத்தில் ஐஸ்கிரீம் சாப்பிட்டுக்கொண் டிருந்தபோது, சிலர் அவரை இனரீதி யாக மோசமாக விமர்சித்ததுடன், உன் நாட்டுக்குத் திரும்பிப் போ என்றும், நீங்களெல்லாரும் சாகவேண்டும் எனவும் கூறியமை குறிப்பிடத்தக் கது.



